**கூட்டுறவு மிகை நிதியம் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டுறவு மிகை நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் அருவச்சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டதாக காட்டப்பட்ட ரூபா 189,001 தொகையான மென்பொருள் மீளாய்வாண்டில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டு மீள்மதிப்பீட்டு கணக்கிற்கு மாற்றப்பட்டது. | மீள்மதிப்பீட்டு கணக்கிற்கு அனைத்துச் சொத்துக்களும் மாற்றப்பட்டதுடன் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி அதற்காக இனங்காணப்பட்டிருக்கவில்லைெ யன்பதுடன் எதிர்காலத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பபடடடிருந்தனர். | அகற்றப்பட்ட சொத்துக்கள் அகற்றல் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். |

### 1.5.3 தொங்கல் கணக்குகள்

| விடயம் | தொகை ரூபா | தொங்கலாக இருந்த காலப்பகுதி | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| தொங்கல் கணக்குகள் | 9,475,735 | 22 ஆண்டுகள் | இது நீண்டகால நிலுவை மீதியாகவிருப்பதுடன் தகவல்களை இனங்காண்பதில் ஏற்பட்ட தாமதத்தால் தீர்ப்பனவு தாமதமானது. அலுவலர்கள் இந்த மீதியை விரைவாக தீர்ப்பதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தனர். | தொங்கல் கணக்கு மீதியை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படா த கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- | --- |
| (அ) | பெறவேண்டிய கூட்டுறவு சங்க கடன்கள் | 584,064,361 | மீதி உறுதிப்படுத்தல் | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டதுடன், 05 சங்கங்கள் மாத்திரமே அதற்குப் பதிலளித்திருந்தன. | மீதி உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | கூட்டுறவு நிதியத்திலிருந்து பெறவேண்டிய தொகை | 5,029,486 | மீதி உறுதிப்படுத்தல் | மீதி உறுதிப்படுத்தலை பெற்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | பெறவேண்டிய திறைசேரி கடன்கள | 81,871,370 | மீதி உறுதிப்படுத்தல் | இவ் விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு திறைசேரி பிரதிச் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. | - மேற்படி - |
| (ஈ) | செலுத்த வேண்டிய திறைசேரி நிதி | 150,000 | செலுத்த வேண்டிய திறைசேரி நிதி | விரைவாக சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள ்ளது. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான பட்டியல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | செலுத்த வேண்டிய தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதி | 3,871,256 | விபரமான பட்டியல்கள் | விரைவாக சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டு ள்ளது. | பட்டியல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பொது வைப்பு கணக்கு | 7,544,762 | விபரமான பட்டியல்கள் | | - மேற்படி - |
| (எ) | நிலையான வைப்பு உத்தரவாத கடன்கொடுத்தோர் | 58,918,112 | கடன் கோவைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல. | நடப்பாண்டு கணக்குகளை தயாரிக்கும் போது இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | கடன் கோவைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தலை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கலைத்தல் (Liquidated) கணக்குகள் (வரவு மீதி) | 2,620,473 | தயாரிக்கப்பட்ட கலைத்தல் கணக்கின் பிரதிகள். | நடப்பாண்டில் சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டது. | கலைத்தல் கணக்கின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்பாடற்ற கடன் பட்டியல்களின் பிரகாரம், 1989 இலிருந்து 2006 வரையான காலப்பகுதியின் போது நிதியத்திடமிருந்து 70 கூட்டுறவு சங்கங்கள் நிதியத்திற்கு கொடுக்கப்பட்ட ரூபா 129,631,173 தொகையான கடனில் 2021 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 89,814,182 மீதியொன்று நிலுவையாகவிருந்தது. ரூபா 606,111 தொகையொன்று மீளாய்வாண்டில் கடன் தவணைப்பணங்களாக பெறப்பட்டிருந்தது. எனினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 102,110,771 தொகையான கடன் வட்டியிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடற்ற கடன் பதிவேட்டிலுள்ள கடன்கள் கூட்டுறவு மிகை நிதியத்திடமிருந்து பெறப்பட்ட மிகவும் பழைய கடன்களாகவிருந்ததுடன் இந்தக் கடன்களை அறவிடுவதற்கு முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. | கடன் தவணைப் பணங்கள் மற்றும் வட்டியினை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 1999 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,721,566 தொகையான மதிப்பிழந்த காசோலைகளின் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது நீண்டகால நிலுவை மீதியாகவிருப்பதுடன் தகவல்களை அறிவது கடினமாகவிருப்பதால் தீர்ப்பனவு காலதாமதமடைந்திருந்தது. | மதிப்பிழந்த காசோலைகளின் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 506,433,222 தொகையான மீதியில் மீளாய்வாண்டில் ரூபா 9,120,436 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இந்தக் கடன் மீதிகளில் வருமதியான ரூபா 216,582,478 தொகையான கடன் வட்டி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் ரூபா 5,854,846 தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்தது. | உரிய சங்கத்தின் அலுவலர்கள் அத்தகைய கடன்களை அறவிடுவதற்கு கோரப்பட்டதுடன் கருத்துரைகளினை அடிப்படையாகக் கொண்டு கடன்கள் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் மீள்பட்டியலிடப்பட்டது. | கடன் தவணைப் பணங்கள் மற்றும் வட்டியினை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 07 வருடங்களாக காணப்படுகின்ற பல்வேறுபட்ட கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சங்கங்களுக்கு கொடுக்கப்பட்ட ரூபா 160,802,292 தொகையான கடன் தொகையையும் அத்தொகைக்கான ரூபா 87,099,974 தொகையான வட்டியையும் அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதியிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்கள் கொடுக்கப்பட்ட சங்கங்களின் அலுவலர்கள் அழைக்கப்பட்டதுடன் வரையறுக்கப்பட்ட குருநாகல கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் மாத்திரம் பதிலளித்திருந்தது. | -மேற்படி - |

### 1.6.2 செலுத்தவேண்டியவைகள்

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | --------------------------- | ----------------------- | ---------------------- |
| (அ) | நிதிநிலைமைக்கூற்றில் ஏனைய பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட மிகை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 6,017,551 தொகையானது 1987 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற போதும், மீளாய்வாண்டின் போதும் அதனைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது நீண்டகால நிலுவை மீதியாகவிருப்பதுடன் தகவல்களை அறிவது கடினமாகவிருப்பதால் தீர்ப்பனவு காலதாமதமடைந்திருந்தது. | செலுத்த வேண்டிய மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 834,392 தொகையான 04 மீதிகளில் கலைத்தல் சமூகங்கள் மற்றும் மிகை அறவீடுகள் 10 வருடங்களிற்கு மேலாகவிருப்பதுடன் 02 வருடங்களிற்கு மேலாகவுள்ள மேல் மாகாண கூட்டுறவு நிதியம் மற்றும் கணக்கு மாற்றல்கள் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது நீண்டகால நிலுவை மீதியாகவிருப்பதுடன் தகவல்களை அறிவது கடினமாகவிருப்பதால் தீர்ப்பனவு காலதாமதமடைந்திருந்ததுடன் மேல்மாகாணத்திடமிருந்து அறவிட வேண்டிய தொகை தொடர்பிலான எழுத்துமூல உறுதிப்படுத்தல்கள் 2022.05.26 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பெறப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

---------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

-------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 105,727,365 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 165,413,611 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 59,686,246 தொகையான வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. வட்டி வருமானம் ரூபா 36,177,803 ஆல் குறைவடைந்தமை மற்றும் ஏனைய செலவினம் ரூபா 22,804,176 ஆல் அதிகரித்தமை என்பன குறித்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையீன்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 மே 07 இல் மிகை நிதியத்திடமிருந்து கட்டிடங்கள் மூலப்பொருள் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 75,000,000 தொகையான கடன் ஏற்பாடு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 1973 இன் கூட்டுறவு சங்கங்கள் விதிகளின் 44 (iii) இன் பிரகாரம் கூட்டுறவு மிகை நிதியத்திடமிருந்து கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அமைப்புக்களிற்கு கடன்கள் கொடுக்கப்பட முடிந்தபோதும் நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்படாத நிறுவனங்களிற்காக கடன் வழங்கப்பட்டிருந்தது. | கட்டிடங்கள் மூலப்பொருள் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடவேண்டிய தொகையை அறவிடுவதற்கு 2021 ஆகஸ்ட் 05 இல் இடம்பெற்ற பொதுக்கணக்குகள் குழுக்கூட்டத்தில் கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு அறிவித்திருந்த போதிலும் இராஜாங்க அமைச்சு உரிய அமைச்சரவை பத்திரத்தை தயாரித்து 2022.03.28 இல் அமைச்சர்களின் அமைச்சு அலுவலகத்திற்கு அனுப்பியிருந்தது. | நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் தொகையானது 16 சதவீத வட்டிவீதத்தில் 08 தவணைக்கட்டணங்களாக செலுத்துவதற்கு வழங்கப்பட்ட போதிலும் கடனை மீளச்செலுத்துவதற்கான நிதி சாத்தியவளத்தின் எந்தவொரு உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. கடன் வழங்கப்பட்டதிலிருந்து 09 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இலும் ரூபா 127,657,592 தொகையான கடன் தொகை மற்றும் வட்டியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட பதில் பொருத்தமானது. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கடன் உடன்படிக்கையின் உறுப்பு 2 இன் பிரகாரம் கடன் தொகை தொடர்பில் பிணை வழங்கப்பட வேண்டியதுடன் கடன்தொகையை செலுத்தாத சந்தர்ப்பத்தில் அத்தகைய சொத்துக்களிலிருந்து கடன்தொகையை அறவிடமுடியுமென உடன்படிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டது. இருந்தபோதிலும், 09 ஆண்டுகள் கடந்திருந்த கடன்தொகையை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட பதில் பொருத்தமானது. | கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | காலி மாவட்ட வரையறுக்கப்பட்ட கூட்டுறவு மருத்துவ மனைச் சங்கத்திற்கு 2013 ஆம் ஆண்டு ஏப்ரலில் வழங்கப்பட்ட ரூபா 50,000,000 கடனானது சங்கத்தால் வழங்கப்பட்ட கோரிக்கைக்கிணங்க 2021 செப்தெம்பர் 21 இல் ஒப்பந்தத்தின் பிரகாரம் புறக்கணிக்கப்பட்டிருந்தது.. கடன் மீளமைத்தல் குழுவிற்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் பிரகாரம் 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் அதிகாரச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் மூலம் இயற்றப்பட்ட 1973 கூட்டுறவுச் சங்க விதிகளால் கூட்டுறவு அபிவிருத்தியின் பணிப்பாளருக்குரிய அதிகாரங்களின் பிரகாரம் கூட்டுறவு முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்ப போதும் விதிகளை இயற்றாமல் அல்லது திருத்தாமல் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தது. | கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் ஏதாவது பொது அல்லது விசேட ஏற்பாடுகளிற்குரிய கூட்டுறவு நிதியத்தை நிர்வாகிப்பார் என கூட்டுறவு சங்கங்களின் விதிகளின் 43 (i) இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கூட்டுறவு நிதியத்தின் நிர்வாகத்திற்காக நிர்வாக முறைமையொன்றாக நிதி முகாமைத்துவ குழுவொன்றை நியமித்திருந்ததுடன் சங்கங்களின் பதிவாளர் நிதியம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக பொறுப்பாகவுள்ளார். | நிதி அதிகாரச்சட்டத்தின் நிபந்தனைகள் மற்றும் சங்கங்களின் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |